திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசு ஏற்க இயலாது என்றால் மக்கள் குழு அமைத்து அந்தப்பள்ளிகள் சரியாக இயங்குகின்றனவா என்று அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர்—ஆசிரியர் சங்கம் இருக்க வேண்டும் என்று இப்போது நாம் வலியுறுத்தி வருகிறோம். அது அமைந்து செயல்பட்டாலே நாம் சொல்லுகின்ற சில குறைபாடுகள் நீங்கி பள்ளிகள் நல்லமுறையில் நடக்க வாய்ப்பு இருக்கும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஒன்றியப் பெருந் தலைவர்கள் நிர்வகிக்கக் கூடிய வழியிலே இருப்பதால் பெருந் தலைவர்களுடைய கருத்துப்படி தான் பெரும் தவறுகள் நடப்பதாகக் கருதப்படுகிறது. எனவே, அந்தப் பள்ளிகளைக் கொண்டு ஒரு கல்வி வாரியம் தனியாக அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் நல்ல முறையில் இயங்குவதற்கு அவர்களுக்கு ஆய்வாளர்களை வைத்திருக்கிறோம். ஆகவே நிர்வாகத்திலே ஒருவர் இருக்கின்றார் என்ற காரணத்தாலே நாம் இந்தக் குற்றங்களைச் சொல்ல முடியாது. குறைகளைக் களைய போதுமான பாதுகாப்புகள் இருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் நாம் பரிசீலனை செய்கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் தரம் மிகவும் குறைந்திருக்கின்றன என்பது தெரிந்திருந்தும் அந்தக் கிராமாந்திர பள்ளிகளில் தரத்தை உயர்த்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடுகள் போக வேண்டுமானால், பெற்றோர்கள் அதிகமான அளவுக்கு பள்ளிகளுக்கு வந்து ஆர்வம் காட்ட வேண்டும் என்றுதான் நாம் எதிர்பார்க்கிறோம்.

*661 வினா—திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகுகல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளியின் கல்வித்தரத்தை உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, பள்ளிகளில் இப்போது கல்வியின் தரம் மிகவும் குறைந்து இருக்கிறது. அதைப் போக்குவதற்கு பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கும், கமிஷனருக்கும் சரியான அதிகாரம் இல்லாமல் இருப்பதால் தான், இந்தப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது அதை மனதிற்கொண்டு பள்ளிகளை சரியாக நிர்வகிக்கக் கூடிய அதிகாரங்களைப் பஞ்சாயத்துத் தலைவருக்கும் கமிஷனருக்கும் கொடுக்க அரசு முன் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது கல்வித் துறை ஆய்வாளராக பஞ்சாயத்து யூனியன் அதிகாரி ஒருவர்தான் இருக்கிறார்கள். இப்போது இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு தரம் உயர்த்த நடவடிக்கை எடுப்பதற்கு பெருந்தலைவருக்கும், கமிஷனருக்கும் அதிகாரம் இருக்கிறது.

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இங்கிலீஷ் மீடியம் போதிக்கப் படுகிறதா ? இல்லையென்றால் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரகங்நாயகம் : தலைவர் அவர்களே, இப்போது இல்லை. அப்படி ஒரு யோசனையும் இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தின் கீழ் இருப்பதன் காரணமாகப் பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் அதிலே பெரிய அதிகாரம் செலுத்துகிறார்கள். அதை வைத்துக் கொண்டு ஆசிரியர்களைக் கூட அடித்துத் துன்புறுத்துகிறார்கள். எனவே, இந்த யூனியனிலே இருக்கிற அதிகாரத்தை அரசாங்கமே ஒற்றுக் கொண்டு அரசுப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்று ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பெருந் தலைவர்கள் ஆசிரியர்களை அடித்தால் அவர் மீது ஐ.பி.சி. சி.ஆர்.பி.சி. போன்றசட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இங்கே கொடுத் இருக்கிற ஆங்கில கேள்வித்தாளில் 'whether it is proposed o improve the standard of Education in the Panchayat Union Schools......'

[1978 மார்ச் 22

என்றிருக்கிறது. அதற்கே இல்லை என்று சொல்லுகிறாரே அமைச்சர். அப்படி என்றால் எதற்கு அரசாங்கம், எதற்கு கல்வி இலாகா. அதுதான் எனக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. அதுதான் ஒழுங்குப் பிரச்சினை.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புதிதாக ஒரு திட்டமும் இல்லை என்று அதற்குப் பொருள்.

திரு. க. சுப்பு : இங்கிலீஷ் டிரான்சலேஷன் தப்பா? அது ரிக்கார்டில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். புதிதாக ஸ்கீம் இல்லை என்று சொல்லிவிட்டார், உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : இங்கிலீஷில் என்ன போட்டு இருக்கிறார்கள் என்றால் 'whether it is proposed to improve the standard of Education in the Panchayat Union Schools ......'
என்று கேள்வி. ஸ்டான்டர்ட் ஆப் எஜிகேஷன் இம்புருவ் செய்ய ஸ்கீம் இல்லை என்றால் என்ன பொருள், அப்புறம் சர்க்கார் எதற்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்ட கேள்வியோடு நிறுத்துங்கள். மீண்டும் மீண்டும் அதே கேள்வியைப் போட்டு, கிளாரிபிகேஷன் கேட்டுக் கொண்டே இருக்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஊராட்சிப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின்கீழ் இருந்தும், கல்வி இலாகாவை சேர்ந்த துணை ஆய்வாளர்கள் அடிக்கடி தலையிடுவதால் அவைகளில் கல்வியின் தரம் குறைகிறது. ஆகவே, அவற்றை ஒன்றியத்தின் முழு நிர்வாகத்தில் கொண்டு வர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, துணை ஆய்வாளர்கள் அடிக்கடி போய்ப் பார்ப்பார்களானால் நிச்சயம் கல்வியின் தரம் உயரும்.

சென்னை மாநகராட்சி.

* 662. வினா—திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு, சென்னை மாநகராட்சி விஷயங்களைக் கவனிக்க மேல் நிலைக் குழுவை நியமித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பரிந்துரையின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா?

ஒ